□ **Q.** □ □□□□□□□□ □□□□□ □□□□□ □□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□ □□□□ □□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□ □□□□□ □□□□ □□□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□, □□□□□ □□□□□□□□□ □□□□ □□□ □□□□□ □□□□□□□□□ □□□□ □□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□ □□□□□□□ □□□□□□□, □□□□□□□□□ □□□□□□□□□ □□□□□ □□□□□□□□□ □□□□ □□□ □□□□□ □□□□□□□□□; □□□□ □□□□□□□□□ □□□□□□□ □□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□ □□□□□ □□□□□□□□□□□□□□□□□. □□□□□□□□□□ □□□□□ □□□□□? □□□□□□□□ □□□□□□□□ □□□□ □□□□□□□ □□□□?

□ **A.** ஃபித்ரா எனும் தர்மம் கடடாயம் நிறைவேற்ற வேண்டிய தர்மமாகும். முஸ்லிமான ஆண்கள், பெண்கள், அடிமைகள், சிறுவர்கள் மீ து இது கடமையாகும்.

முஸ்லிமான அடிமை, சுதந்திரமானவர், ஆண், பெண், பெரியவர் மற்றும் சிறுவர் மீ து நோன்பு பெருநாள் தர்மமாக ஒரு ஸாவு கோதுமை, அல்லது ஒரு ஸாவு பேரீ ச்சையை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விதியாக்கினார்கள். (அறிவி ப்பவர்: இப்னு உமர் (ரலி)
ந□ல்: புகாரி 1503)

ஒருவர் தமது பராமரிப்பில் உள்ள அனைவருக்காகவும் இந்தத் தர்மத்தை வழங்குவது அவசியம் ஆகும்.
ஒரு ஸாவு என்பது இரு கைகள் கொள்ளும் அளவு போல் நான்கு மடங்காகும்.
நிறுத்தல் அளவையில் சுமார் இரண்டரகை கிலோ அரிசியாகும். அல்லது அதற்கான கிரயமாகும்.
நமது பராமரிப்பில் ஐந்து நபர்கள் இருந்தால் தலகைக்கு இரண்டரகை கிலோ அரிசி வீ தம் பன்னிரண்டரகை கிலோ அரிசியை வழங்க வேண்டும். இதுவே ஃபித்ரா எனப்படுகிறது.

□□□□□□□□□□□□ □□□□□□□□:

இரண்டு காரணங்களுக்காக ஃபித்ரா எனும் இந்தத் தர்மம் கடமையாக்கப்பட்டுள்ளது.

நோன்பாளியிடமிருந்து ஏற்பட்ட வீணான காரியங்களை விட்டும் நோன்பாளியதை தூய்மைபடுத்தவும், ஏழைகளுக்கு உணவாகவும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபித்ரா தர்மத்தை விதியாக்கினார்கள். (அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி)
நூல் : அபூதாவூத் 137, இப்னுமாஜா 1817)

நோன்பு நோற்றவர்களுக்கு நோன்பில் ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாக இது அமகிறது. ஏழைகளுக்கு உணவளித்த நன்மையும் கிடைக்கிறது. நோன்பு வைக்காத சிறுவர்கள், நோயாளிகள் போன்றோர்களின் சார்பில் வழங்கும் போது ஏழைகளுக்கு உணவளித்த நன்மை மட்டும் கிடைக்கும்.

□□□□□□□□□□□ □□□□□:

மக்கள் (பெருநாள்) தொழுகைக்குச் செல்வதற்கு முன்னால் ஃபித்ரா தர்மத்தை வழங்கிவிட வேண்டும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.
(அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) நூல்: புகாரி 1503, 1509)

இந்த ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு பெருநாள் தினத்தில் சுப்ஹுக்குப் பின், பெருநாள் தொழுகைக்கு முன் ஃபித்ரா கொடுக்க வேண்டும் என்று சில சகோதரர்கள் கருதுகிறார்கள்.

பெருநாள் தொழுகைக்கு முன் பெருநாள் தினத்தில் ஃபித்ரா கொடுக்க வேண்டும் என்றும் இந்த ஹதீஸிலிருந்து பொருள் கொள்ள இயலும்.

பெருநாள் தொழுகைக்குப் பின்னால் கொடுக்கக் கூடாது. எத்தனை நாட்களுக்கு முன்னாலும் கொடுக்கலாம் எனவும் பொருள் கொள்ளலாம்.

பெருநாள் தொழுகைக்கு மான் என்பதை இரண்டு விதமாகவும் பிரிந்து கொள்ள இடமிருந்தாலும் வேறு பல ஹதீஸ்களை ஆராயும் போது, "பெருநாள் தொழுகைக்குப் பின்னர் கொடுக்கும் அளவுக்கு தாமதிக்க கூடாது. பெரு நாளைக்கு சில நாட்களுக்கு மான்னால் கொடுக்கலாம்" என்ற கருத்தே சரியானது என்பது உறுதியாகிறது.

ரமலான் ஸகாத்தை பராமரிக்கும் பொறுப்பில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னை நியமித்திருந்தார்கள். அப்போது ஷைத்தான் வந்து அதிலிருந்து எடுக்கலானான். உடனே "நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் உன்னைக் கொண்டு சென்றேன்" என்று நான் கூறினேன். அதற்கு அவன் "எனக்குக் கூடும்பம் உள்ளது. எனக்குக் கடும் தேவை உள்ளது" எனக் கூறினான். அவனை நான் விட்டு விட்டேன். காலையில் நான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்ற போது, "நேற்றிரவு உன் கதை என்ன ஆனான்?" என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! அவன் வறுமையை முறையிட்டதால் இரக்கப்பட்டு அவனை விட்டு விட்டேன்" என்று கூறினேன். அதற்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அவன் உன்னிடம் பொய் சொல்லியுள்ளான். மீண்டும் உன்னிடம் வருவான்" என்று கூறினார்கள். நான் அவனுக்காக்க் காத்திருந்தேன். அவன் மீண்டும் வந்து உணவை அள்ள ஆரம்பித்தான். அவனைப் பிடித்து "உன்னை நபிகள் நாயகத்திடம் கொண்டு போகப் போகிறேன்" என்று கூறினேன். "எனக்கு வறுமை உள்ளது. கூடும்பம் உள்ளது. இனி வர மாட்டேன்" என்று அவன் கூறினான். அவனை நான் விட்டு விட்டேன். காலையில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் சென்ற போது, "உன் கதை என்ன ஆனான்?" என்றார்கள். அவன் கடுமையான தேவையை முறையிட்டான். இரக்கப்பட்டு அவனை விட்டு விட்டேன் எனக் கூறினேன். "அவன் உன்னிடம் பொய் சொல்லியிருக்கிறான். மீண்டும் வருவான்" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். நான் அவனுக்காகக் காத்திருந்தேன். மூன்றாவது நாளும் வந்தான்.... என்ற ஹதீஸ் புகாரியில் வக்காலத் என்ற பாடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுருக்கமாக புகாரி 3275, 5010 ஆகிய எண்களில் குறப்பட்டுள்ளது.

(இங்கே ஷைத்தான் என்பது திருட்டுத் தொழில் செய்யும் கெட்ட மனிதனைக் குறிக்கிறது. திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் கெட்ட மனிதர்களை ஷைத்தான் என்று சொல்லும் வழக்கம் உள்ளது)

□□□□□ □□□□ □□□□□□□□ □□□□:

"இந்த ஹதீஸில் ஃபித்ரா என்ற கூறப்படவில்லை. ரமளான் ஜகாத் என்ற தான் கூறப்பட்டுள்ளது. இது ரமளான் மாதத்தில் ஜகாத்தை திரட்டுவதையே கூறிக்கிறது. ஃபித்ராவை கூறிக்கவில்லை" என்ற சிலர் வாதிடுகின்றனர். இந்த வாதம் தவறாகும்.

ஜகாத் என்பது ஆண்டு தோறும் ரமளானில் மட்டும் திரட்டப்படும் நிதி அல்ல. அன்றாடம் திரட்டப்பட்டுக் கொண்டே இருக்கும் நிதியாகும். ஆனால் 'ரமளான் ஜகாத்' என்ற சொல் ஃபித்ராவை மட்டும் தான் கூறிக்கும்.
இதை நாம் சுயமாகக் கூறவில்லை. பின்வரும் ஹதீஸிலிருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

ரமளான் ஸகாத்தை அடிமை, சுதந்திரமானவன், ஆண், பெண் அனைவர் மீதும் ஓரு ஸாவு பரீசிச்சம் பழம் அல்லது ஓரு ஸாவு கோதுமை என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிர்ணயித்தார்கள் என்ற ஹதீஸ் நஸயீ 2453, 2455 ஆகிய எண்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"ஒவ்வொருவருக்கும் ஓரு ஸாவு என்று ரமளான் ஜகாத்தை ஏற்படுத்தினார்கள்" என்பது ஃபித்ராவதை் தான் கூறிக்கும். ஜகாத்தைக் கூறிக்காது. ஜகாத் என்பது ஆளுக்கு ஆள் வறேுபடும். அனைவருக்கும் ஓரு ஸாவு என்று ஜகாத் வசூலிக்கப்படாது. எனவே அபூ ஹுரைரா (ரலி) சம்பந்தப்பட்ட ஹதீஸ் ஃபித்ராவையே கூறிக்கிறது.

எனவே நோன்பு பெருநாள் தர்மம் மக்களிடம் திரட்டப்பட்டது என்பதற்கும் இது ஆதாரமாக அமைந்திருக்கிறது.
திரட்டும் பணியை பெருநாளைக்கு முன்று நாட்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கலாம் என்பதற்கும் இது ஆதரமாக அமைந்துள்ளது.

ஃபித்ரா தர்மத்துக்காக திரட்டப்பட்ட பொருட்கள் கறுநைந்தபட்சம் முன்று நாட்கள் அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் பொறுப்பில் இருந்துள்ளது. முன்று நாட்களும் ஷைத்தான் (கெட்ட மனிதன்) வந்து அதை அள்ளியிருக்கிறான் என்பதிலிருந்து பெருநாளைக்குச் சில நாட்களுக்கு முன்பாகவே ஃபித்ராவதை் திரட்டலாம் என்பது தெரிகிறது.

நபித் தோழர்கள் நோன்பு பெருநாளைக்கு ஓருநாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன் ஃபித்ராவகை் கொடுத்து வந்தனர் என்று புகாரி 1551-வது ஹதீஸ் கூறுகிறது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழும் பூமியே நடந்ததை இது கூறிக்கும் என்றால் இது மற்றொரு ஆதாரமாக அமையும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்துக்குப் பின்னர் நபித் தோழர்கள் இவ்வாறு கொடுத்து வந்தார்கள் என்பது இதன் கருத்தாக இருந்தால் அபூஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பை உறுதி செய்வதாக இது அமையும்.

எனவே, நோன்பு பெருநாளைக்குச் சில நாட்களுக்கு முன்பே ஃபித்ராவதை திரட்டலாம் என்பதில் சந்தேகம் இல்லை. பெருநாள் தொழுகை ஆரம்பமாகும் வரை அதன் கடைசி நேரம் உள்ளது.

□□□ □□□□□ □□□□□□□□ □□□□ □□□□□ □□□□□□□□□□:

ஓரு ஊரில் திரட்டப்படும் ஃபித்ரா தர்மத்தை வேறு ஊர்களுக்கு வழங்கக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர். இதற்கு நேரடியாக எந்த ஆதாரமும் அவர்களிடம் இல்லை.

ஜகாத்தை அவர்களின் சொந்தர்களிடமிருந்து பெற்று அவர்களில் உள்ள ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டும் என்று கூறி முஆத் பின் ஜபல் (ரலி) அவர்களை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யமன் பகுதிக்கு அனுப்பினார்கள். (புகாரி 1395, 1496, 4347)

"அவர்களில் சொந்தர்களிடம் திரட்டி அவர்களில் ஏழைகளுக்கு வழங்க வேண்டும்" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளதால் எந்தப் பகுதியில் திரட்டப்பட்டதோ அங்கு தான் விநியோகிக்க வேண்டும் என்று இவர்கள் வாதிடுகின்றனர்.

இது நோன்பு பெருநாள் தர்மத்தைப் பற்றிய ஹதீஸ் அல்ல. ஜகாத் பற்றிய ஹதீஸாகும் என்பதை முதலில் நாம் கவனிக்க வேண்டும்.

அவர்களில் ஏழைகள், அவர்களில் சொந்தர்கள் என்பது அந்த ஊரைச் சேர்ந்த ஏழைகள், அந்த ஊரைச் சேர்ந்த சொந்தர்கள் என்ற பொருளில்

பயன்படுத்தப்பட்டதா?

முஸ்லிம்களில் உள்ள சலெ்வந்தர்கள், முஸ்லிம்களில் உள்ள ஏழகைள் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதா? இரண்டுக்கும் இடம் தரக்கூடிய வகயைில் இது அமந்ைதுள்ளது.

இரண்டாவது கருத்தில் தான் இது பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதபை் பின்வரும் ஹதீ ஸ் உறுதி சயெ்கிறது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலஹைி வஸல்லம் அவர்கள் பனூ சுலமை் கோத்திரத்தினரிடம் ஜகாத்ததை் திரட்ட ஒருவரை நியமனம் சயெ்தார்கள். அவர் வந்ததும் அவரிடம் கணக்குக் கேட்டார்கள். "இது உங்களுக்கு உரியது; இது எனக்கு அன்பளிப்பாக கிடதை்தது" என்று அவர் கூறினார்...
(புகாரி 6979)

பனூ சுலமை் கூட்டத்தார் மதீ னாவசை் சரே்ந்தவர்கள் அல்லர். வறேு பகுதியசை் சரே்ந்தவர்கள். அவர்களிடம் வசூலித்த ஜகாத்தை அந்த நபித்தோழர் நபிகள் நாயகத்திடம் மதீ னாவுக்குக் கொண்டு வந்திருக்கிறார். ஒரு இடத்தில் வசூலித்து இன்னொரு இடத்தில் விநியோகிக்கலாம் என்பதை இந்த ஹதீ ஸிலிருந்து அறியலாம்.

எனவே, ஜகாத்தாக இருந்தாலும் ஃபித்ராவாக இருந்தாலும் ஒரு இடத்தில் திரட்டி இன்னொரு இடத்தில் விநியோகிக்கலாம்.

மலேும் ஏழகைளுக்கு உணவாகப் பயன்படுவதற்காகவே ஃபித்ரா என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய காரணமும் கவனத்தில் கொள்ளப்பட வணே்டும்.

வசதிபடதை்தவர்கள் அதிகமாக வாழும் பகுதியில் திரட்டி ஏழகைள் அதிகம் வாழும் பகுதியில் விநியோகம் சயெ்வதில் எந்தத் தவறும் இல்லை. பொருள் வசதி படதை்த நாடுகளில் வசிப்போர் ஏழகைள் வசிக்கும் பகுதிக்கு அனுப்பினால் தான் ஃபித்ராவின் இரண்டு நன்மகைளையும் பறெ முடியும்.

ஃபித்ராவதை் திரட்டி வழங்்கும் பணியில் பல இயக்கத்தினர் சயெல்பட்டு வருகின்றனர். ஃபித்ரா என்பது மார்க்்கக் கடமையாக உள்ளதால் எந்த இயக்கம் ஃபித்ராவதை் திரட்டி ஃபித்ராவுக்்கு்த் தகுதியானவர்களுக்்கு மழுமையாகவும், முறையாகவும் விநியோகிக்்கிறதோ அந்த இயக்கத்தில் தான் கொடுக்்க வணே்டும்.

எந்தநெ்தப் பகுதியில் எவ்வளவு திரட்டப்பட்டது என்ற முழு விபரத்தையும், எந்தநெ்த ஊருக்்கு எவ்வளவு வழங்்கப்பட்டது என்ற விபரத்தையும் வளெியிடாமல் எங்்களிடம் கணக்்கு உள்ளது வந்து பார்த்துக் கொள்ளுங்்கள் என்று கறூவோரிடமும், விபரம் இல்லாமல் 20 லட்சம் வந்தது 1000 பரேுக்்கு்க் கொடுத்தோம் என்று ஏமாற்றுவோரிடமும், எந்தக் கணக்்கையும் யாரிடமும் தரெிவிக்்கத் தவேையில்லை என்று நடந்து கொள்வோரிடமும் ஃபித்ராவகை் கொடுத்தால் ஃபித்ரா கொடுத்த நன்மை கிடகை்காது. அக்்கடமை நிறவைறோது. தரெிந்து கொண்டே இவ்வாறு சயெ்வது இக்்கடமையை அலட்சியம் சயெ்ததாக ஆகிவிடும்.

Answered by: P.J.

source: http://www.onlinepj.com/